ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி

தொலைபேசி: 91–11–23052205

நிகரி: 91–11–23052219

www.eci.nic.in / www.ecisveep.nic.in


ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

இந்தியத் தேர்தல் ஆணையம்

# தேர்தல் கல்வியறிவுக் குழு

## 10-ம் வகுப்புக்கான வழிகாட்டிக் குறிப்புகள்



அமைப்பாளர்கள் குறிப்பு





ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

இந்தியத் தேர்தல் ஆணையம்

# தேர்தல் கல்வியறிவுக் குழு

## 10-ம் வகுப்புக்கான வழிகாட்டிக் குறிப்புகள்



# முகப்புரை

இவ்வழிகாட்டிப் புத்தகத்தில், 10–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்தல் கல்வியறிவுக் குழுவின் மூலம் நடத்தப்படும் பாடமுறைகள் இடம்பெற்றுள்ளன. 15லிருந்து 16 வயதுடைய மாணவர்கள் தேர்தல் நடைமுறைகளைச் சார்ந்த தகவல்களை அறிந்து கொள்ளவும், அத்தகவலை மனதில் இருத்தி, நடைமுறைப்படுத்தவும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி வடிவமைக்கப்பட்டுள்ள இப்புத்தகம் தேர்தல் கல்வியறிவுக் குழு ஒருங்கிணைப்பாளருக்கு வழிகாட்டிக் கையேடாகவும் விளங்கும்.

குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள் (Conveners) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) இப்புத்தகத்தில் உள்ள செயல்முறைகளை மாணவர்களிடத்தில் பகிர்ந்து கொண்டு நடைமுறைப்படுத்த ஊக்கம் அளிக்க வேண்டும். 10–ஆம் வகுப்பு மாணவர்கள், தங்களது கல்வியாண்டின் இறுதியில் தேர்தல் தொடர்பாக பின்வருவனவற்றை அறிந்தவர்களாக இருக்க வேண்டும் :

1. மாணவர்கள், தங்களை வாக்காளராகப் பதிவு செய்வதற்குரிய முறைகளை அறிந்து கொள்ளுதல்-எவ்வாறு படிவம்–6 ஐ நிரப்புவது ?, பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் யாவை ?, படிவங்களை எங்கிருந்து பெறுவது ?
2. வாக்குச் சாவடிக்குள் வாக்களிக்கத் தேவையான வசதிகள் குறித்து அறிந்து கொள்ளுதல் மற்றும் 'ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது' என்னும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் குறிக்கோளை மதித்துப் போற்றுதல்.
3. மாணவர்கள், வாக்கின் மதிப்பை மதித்துப் போற்றுதல்
4. இவர்களில் எவருமில்லை (NOTA)என்னும் நோட்டாவைக் குறித்தும், நோட்டா உட்பட ஒவ்வொரு வாக்கும் எண்ணிக்கைக்குரியது என்பது குறித்தும் மாணவர்கள், தெரிந்து கொள்ள வேண்டும்.
5. நியாயமான முறையில் வாக்களிப்பது குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.





அமைப்பாளர்கள் குறிப்பு





அமைப்பாளர்கள் குறிப்பு

## தேர்தல் பள்ளிப் பாடல்

நாமனைவரும் இந்திய வாக்காளர்.
இந்நாடே எமது பெருமிதம்.
குடியாட்சி எமக்குப் பிடிக்குமே.
அனைவரின் பெருமை இதுவேதான்!.

வாக்கின் பெருமை உணர்வதே
முதற்கண் நமது கடமையாம்.
இதன்வலிமை, இதன் இயல்பு
நன்றாய் உணர்வோம் நாமெல்லாம்!

வாக்களிப்பது உரிமையே
நிர்ப்பந்தம் ஏதும் கிடையாது.
பதினெட்டு வயது எட்டியதும்,
பதிவேட்டில் பதிவது அவசியமே!

வாக்குச்சாவடி அலுவலரோ,
தேர்தல்நடத்தும் அலுவலரோ
படிவம் ஆறை (6) நிரப்பியே
புதிதாய் பெயரைச் சேர்த்திடுவோம்!

படிவம் 7ஐ நிரப்பியே
நீக்கம் செய்ய உதவிடுவோம்!
பெயரில் திருத்தம் செய்திடவே
படிவம் 8ஐ நிரப்பிடுவோம்!
முகவரி மாற்றம் ஒரேதொகுதிக்குள்
படிவம் 8Aவினை நிரப்பிடுவோம்!

தேர்தல் குறித்த தகவல்களை
தினமும் திரட்டிப் பெறுவோமே!
வாக்காளர் பட்டியலில்
நமக்கோர் இடத்தினைப் பெற்றிடுவோம்!
உற்றார் உறவினர் நண்பர்கள்
அனைவருக்கும் இதைஉணர்த்திடுவோம்.
(நாமனைவரும் இந்திய...........)

பேராசை ஏதும் கொள்ளாமல்,
மிரட்டலுக்கும் பணியாமல்,
நெஞ்சை நிமிர்த்திச் சொல்வோம் நாம்,
'விலைமதிப்பற்ற என் வாக்கு
விற்பனைக்கல்ல, விற்பனைக்கல்ல'.

அள்ளிக்கொடுக்கும் கொடைகளிலே
பாரதத்தின் பெருமைதனைப்
பாரெங்கும் பறைசாற்றும்
வாக்களித்தல் ஒன்றேதான்
நனிசிறந்த கொடையாகும்.
(நாமனைவரும் இந்திய ..........)

பதிப்பு:
இந்தியத் தேர்தல் ஆணையம், நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி-110001

இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடங்கள், படங்கள், விளக்கங்கள் ஆகியவற்றின் பதிப்புரிமை
இந்தியத் தேர்தல் ஆணையத்தைச் சார்ந்தது.



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 5 |
| 2. | நோக்கங்கள் | 5 |
| 3. | அமைப்பு | 6 |
| 4. | உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு | 6 |
| 5. | ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) மற்றும் பணிகள் | 6 |
| 6. | ஒருங்கிணைப்பாளர் (Convener) | 7 |
| 7. | இடம் | 7 |
| 8. | தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமர்வுகள் | 7 |
| 9. | முன்மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை | 8 |
| 10. | செயல்பாடுகள் | 8 |
| 11. | அமர்வின் அமைப்பு | 9 |
| 12. | தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அணுகுமுறை. | 9 |
| 13. | அறிவுரைகளுடன் கூடிய செயல்பாடுகள் | 10 |
| | i) குடியரசுச் சுவருக்குப் பங்களித்தல்–சுவர் இதழ் | 11 |
| | ii) நிர்வசித்ரா-திரைப்படக் காட்சி / திருப்புத்தாள் காட்சிப்படுத்துதல் | 13 |
| | iii) வாக்காளராகப் பதிவு செய்வதற்கான களப்பணி | 16 |
| | iv) இவரில் எவருமில்லை (NOTA) என்னும் நோட்டா குறித்த அட்டை விளையாட்டு | 19 |
| | v) முன்னேறுதல் | 22 |
| | vi) தேசிய வாக்காளர் தினத்திற்கான செயல்முறை - ஓவியம் வரைதல் & சுவரொட்டி தயாரித்தல் போட்டி | 27 |
| 14. | செயல்பாடுகளுக்கான தகவல் தொகுப்புகள். | 28 |
| 15. | சுருக்கம் மற்றும் சொல் விளக்கம் (Abbreviations & Glossary) | 36 |






30. **தேர்தல் நடத்தும் அலுவலர்** (Returning Officer(RO)):- தேர்தல் ஆணையம், மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுடன் சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதிகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக நியமிக்கப்படும் மாநில அரசின் அலுவலர்.

31. **வாக்குரிமை** (Suffrage) :- தேர்தலில் வாக்களிக்கும் உரிமை.

32. **வயது வந்தோர் வாக்குரிமை** (Universal Adult Franchise) :- சாதி, மதம், நிறம், வகுப்பு அல்லது பாலினம், ஆகிய எவ்வித வேறுபாடுமின்றி 18 வயது நிரம்பிய அனைத்து மக்களுக்கும் வாக்களிக்க உரிமையுண்டு என்பதாகும்.

33. **வாக்காளர் பெயர் பதிவு** (Voter Registration):- தகுதி வாய்ந்த ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட வாக்காளராக வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்யும் நடைமுறை.

34. **வாக்களிப்பது** (Voting):- தேர்தலில் தனது விருப்பத்தை, தேர்வை வெளிக்கொணர்வது.

35. **வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி** (Voter Verifiable Paper Audit Trail (VVPAT):- வாக்காளர்கள் தாங்கள் செலுத்திய வாக்கு சரியான வேட்பாளருக்கு சென்றடைந்ததா என்பதை அறியவே இவ்வகை இயந்திரங்கள் உருவாக்கப்பட்டது. வாக்களித்தபின், அதாவது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள நீல நிறப் பொத்தானை அழுத்தினால், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியில் ஒரு காகிதச் சீட்டு வரும். அச்சீட்டில் வேட்பாளரின் பெயர், சின்னம் மற்றும் பதிவு எண் பதிக்கப்பட்டிருக்கும். இந்த இயந்திரம் வாக்களித்தவர் மட்டுமே காணும் வகையில் கண்ணாடிப் பெட்டியில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும். இச்சீட்டினை ஏழு வினாடிகள் மட்டுமே வாக்காளர் காண முடியும். பின்பு அச்சீட்டு அடைக்கப்பட்ட பெட்டியில் விழுந்துவிடும். தேர்தல் அதிகாரிகளால் மட்டுமே இவ்வகை இயந்திரங்களை செயல்படுத்த முடியும்.







அறிவிக்கப்பட்டவுடன், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடைபெறுவதற்காக இவ்விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

20. **இவர்களில் எவருமில்லை (None of the above** (NOTA)):- இந்தத் தெரிவு அக்டோபர் 2013-ல் அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மற்றும் வாக்குச் சீட்டிலும் வெளியிடப்பட்டது. இதன் மூலம் யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லாதவர்கள் சுயவிருப்பத்துடன், விதி மீறல்கள் எவையும் இன்றி முடிவெடுத்து வாக்களிக்க முடியும்.

21. **வேட்புமனு** (Nomination)-வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுவதற்காக விண்ணப்பிக்கும் படிவமே வேட்புமனு எனப்படும்.

22. **தேசிய வாக்காளர் தினம்** (National Voters' Day (NVD)) :- வாக்காளர்களை பெருமளவில் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், குறிப்பாக இளைஞர்களைப் பதிவு செய்யவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. மேலும் இதன் மூலமாக, வாக்காளர் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

23. **தேசிய வாக்காளர் சேவை தகவு** (National Voters' Service Portal(NVSP)):- (www.nvsp.in) இந்தியத் தேர்தல் ஆணையத்தின்கீழ் செயல்படும் இணையதளம். இதன் மூலம் பொதுமக்களும், தேர்தல் அலுவலர்களும் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

24. **பஞ்சாயத்து** (Panchayat)-இந்தியாவில் தற்போது பஞ்சாயத்து ராஜ் என்னும் ஆட்சி முறை உள்ளது. இதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிராமப்பஞ்சாயத்து அடிப்படையாக உள்ளது. இது கிராமப் பஞ்சாயத்து (கிராம அளவில்), ஊராட்சி ஒன்றியம் (மண்டல அளவில்), மாவட்டப் பஞ்சாயத்து (மாவட்ட அளவில்) என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

25. **நேரடித் தேர்தல்** (Plebiscite) மிக முக்கியமாக பொதுநலன் சார்ந்த கேள்வி குறித்து தீர்வெடுக்கும் பொருட்டு வாக்காளர்களின் / மக்களின் நேரடி வாக்கினைப் பெறுதல்.

26. **வாக்குச் சாவடி** (Polling Station)-தேர்தல் நாளன்று வாக்காளர்கள் தங்களின் வாக்குகளைப் பதிவு செய்யும் பொருட்டு, ஒதுக்கப்பட்ட அறை / கூடம். இதனை வாக்குச்சாவடி என்பர்.

27. **வாக்குச்சாவடி தலைமை அலுவலர்** (Presiding Officer):- இவர் வாக்குப் பதிவு அலுவலர்களின் உதவியோடு வாக்குச்சாவடியில் வாக்குப் பதிவு தொடர்பான பணிகளை மேற்கொள்வார்.

28. **மாற்றுத் திறனாளிகள்** (Persons with Disability (PwDs)) :-தேர்தலின் போது உடல் உறுப்புகளில் ஏதேனும் குறைபாடுடைய நிலையில், சிறப்பு வசதிகள் தேவைப்படுவோர். இவர்களுக்கு தேர்தலின் போது சாய்வு தளம், தன்னார்வலர்கள், சக்கர நாற்காலி என அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

29. **பொது மக்கள் வாக்கெடுப்பு** (Referendum):- மக்களின் பிரதிநிதி யார் என்ற ஒற்றை அரசியல் கேள்விக்குரிய மக்களின் முடிவை நேரடியாகத் தெரிந்து கொள்வதற்கு நடத்தப்படும் தேர்தல்.





## 1. முன்னுரை

அரசியல் சார்பற்ற, நடுநிலையான மற்றும் பாகுபாடற்ற முறையில், இந்தியக் குடிமக்களின் அனைத்து வயதினரும் உற்சாகத்துடன் பங்கேற்று, செய்முறைப் பயிற்சி அனுபவம் வாயிலாக தேர்தல் குறித்த அறிவைப் பெறும் பொருட்டு தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள், நம் நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள், குறிப்பாக, இந்தியா முழுவதிலும் இருக்கும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில், 9 முதல் 12 ஆம் வகுப்பில் பயிலும் வருங்கால வாக்காளர்களைக் குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப்பட்டு வருகின்றன. இவை எதிர்கால வாக்காளர்களுக்கான தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் என அழைக்கப்படும்.

இக்கல்வியறிவுக் குழுவில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் உறுப்பினர்களாக இருப்பர். பின்வரும் பகுதிகளில், தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் எவ்வாறு அமைக்கப்படும், அக்குழுவில் பங்குபெறுபவராக, ஒருங்கிணைப்பாளராக இருப்பவர்கள் யார், அவை எங்கே, எப்படி நடத்தப்படும், என்ன செயல்பாடுகள் இக்குழுவில் சேர்க்கப்படும் என்பவை குறித்து விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

## 2. நோக்கங்கள்

(i) மக்களுக்கு தேர்தல் குறித்த கல்வியறிவைப் புகட்டும் விதமாக, அதாவது வாக்காளராகப் பதிவுசெய்தல், தேர்தல் செயல்முறை மற்றும் தொடர்புடைய பொருண்மைகள் குறித்த செய்முறைப் பயிற்சியை அனுபவம் மிக்கவர்களின் வாயிலாகக் கற்பித்தல் ;

(ii) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதிசெய்யும் கருவியைக் (Voter Verifiable Paper Audit Trail (VVPAT)) குறித்து பழக்கப்படுத்துதல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் உறுதித்தன்மை, அதன் மீதான நம்பகத்தன்மை குறித்த விழிப்புணர்வூட்டல்;

(iii) தாம் அளிக்கவிருக்கும் வாக்குகளின் வலிமையைப் புரிந்துகொள்வதிலும், வாக்குரிமையை நம்பிக்கையுடனும், வசதியாகவும், நேர்மையான முறையிலும் எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலும் இலக்கிடப்பட்ட மாணவர்களுக்கு, அதாவது வருங்கால வாக்காளர்களுக்கு உதவுதல்;

(iv) உறுப்பினர்களின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி, தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் தேர்தல் குறித்த அறிவை மக்களிடம் கொண்டு செல்லுதல்;

(v) தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் 18 வயதை அடையும் போது, வாக்காளராகப் பதிவு செய்ய உதவுதல்;

(vi) தேர்தல் குறித்த பணிகளில் தங்களின் பங்களிப்பை மேம்படுத்தவும், தெளிவான மற்றும் நேர்மையான வாக்களிப்பு என்னும் பண்பை அதிகரிக்கவும், 'ஒவ்வொரு வாக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது' மற்றும் 'ஒரு வாக்காளரும் விடுபட்டுவிடக்கூடாது' என்னும் கொள்கையைப் பின்பற்றவும் பொதுமக்களுக்கு உதவுதல்.





## 3. அமைப்பு

ஒவ்வொரு வகுப்பு மற்றும் பிரிவிலும் தேர்தல் கல்வியறிவுக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளியின் குறிப்பிட்ட வகுப்பிற்குமான தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் வேறுபட்டிருக்கும். 9, 10, 11, 12 என ஒவ்வொரு வகுப்பிலும் செய்ய வேண்டிய செயல்பாடுகள் குறித்து தனித்தனியே அளிக்கப்பட்டிருந்தாலும், ஒரே வகுப்பைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவு மாணவர்களுக்கு ஒரே மாதிரியான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் திட்டமிட்ட வகுப்பில் / பிரிவில் வகுப்புவாரியாகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வகுப்பின் அனைத்து மாணவர்களும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்களாக இருப்பர்.

## 4. உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் / வகுப்பிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டு தேர்தல் கல்வியறிவுக் குழுக்களை நடத்த மாணவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பள்ளியின் ஒருங்கிணைப்பு அலுவலரின் வழிகாட்டல், கலந்தாலோசித்தல் மற்றும் கண்காணித்தலின்கீழ், தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை மேற்கொள்ள பொறுப்புடையவர்களாக இருப்பர்.

மாறாக, ஆசிரியர்களின் வாயிலாக மாணவர்களின் பங்களிப்போடு செயல்பாடுகளை நடத்த பள்ளி நிர்வாகம் அனுமதிக்கலாம்.

## 5. ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) மற்றும் பணிகள்

பள்ளியின் மனிதவளம் / சமூக அறிவியல் (Humanities / Social Science) துறையின் ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்கள், தேர்தல் கல்வியறிவுக் குழுக்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்களாகச் செயல்படுவர். தொடர்புடைய தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வழிகாட்டிகளாகவும் அவர்களே செயல்படுவர். தேர்தல் பணி அனுபவம் கொண்ட ஆசிரியர்களுக்கு இப்பணியில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களின் பணி பின்வரும் செயல்களை மையமாகக் கொண்டிருக்கும்: -

(i) மாவட்டத் தேர்தல் அலுவலர் பரிந்துரைக்கும் அமைப்பினைக்கொண்டு, தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வள ஆதாரங்களைப் பெறுவதற்கு ஒருங்கிணைக்க வேண்டும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வள ஆதாரங்கள் இணையதளம் வாயிலாக அல்லது மாவட்டத் தேர்தல் அலுவலரால் ஏனைய வழிகளில் வழங்கப்படும்.

(ii) குறிப்பிட்ட தகவல் தொகுப்புகள் / கருவிகளைப் பயன்படுத்தி, பள்ளியில் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களின் பயிற்சியை எளிதாக்குதல்.

(iii) கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்.

(iv) செய்முறை அனுபவம் வாயிலாக வாக்காளர் கல்வி தொடர்பான தகவல் தொகுப்புகளைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல்





11. **தேர்தல்** (Election):– -அரசு நிர்வாகத்தினை வழிநடத்துவதற்காக ஒரு நபரை மக்கள் தேர்ந்தெடுக்கும் செயல்முறை / நடவடிக்கை.

12. **வாக்காளர்**(Elector):- வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று, தேர்தலின்போது வாக்குப் பதிவு செய்யத் தகுதி உடைய நபர்கள்.

13. **தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்றல்** (Electoral participation) :- ஒருவர் மக்களாட்சி வழியிலான அரசில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் வாக்காளராக, தேர்தல் அலுவலராக, வேட்பாளராக, அரசியல் கட்சி அல்லது இன்ன பிற பங்காளராக ஈடுபடுதல்.

14. **தேர்தல் நடைமுறை** (Electoral Process):-மக்களாட்சியில் தேர்தல் செயல்முறைகளின் ஒரு பகுதியாக வாக்காளர், தேர்தல் அலுவலர், வேட்பாளர், அரசியல் கட்சிகள் என அனைவரும் தேர்தல் பணிகளில் ஈடுபடுதல்.

15. **வாக்காளர் பெயர்ப் பட்டியல்** (Electoral Roll):- பொதுவாக வாக்காளர் பட்டியல் என அழைக்கப்படுவது ஒரு தொகுதியில் உள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களை உள்ளடக்கிய பட்டியல் ஆகும். முறையான பராமரிப்பிற்காக ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியல் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒரு வாக்குப் பதிவு பகுதியில் உள்ள வாக்காளர்களின் விவரங்களை இப்பட்டியல் கொண்டிருக்கும்.

16. **வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை** [Electors Photo Identity Card (EPIC)]:- தனது தொகுதியின் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்தவர்களுக்கு வாக்காளர் பதிவு அலுவலரால் வழங்கப்படும் அடையாள அட்டை. இது தேர்தலில் வாக்களிப்பதற்கான ஆளறி அட்டையாகக் கருதப்படுகிறது.

17. **வாக்காளர் பதிவு அலுவலர்** [Electoral Registration Officer(ERO)] :- ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தயாரிப்பு தொடர்பான பணியினை மேற்கொள்வதற்காக இந்தியத் தேர்தல் ஆணையம் மாநில அரசுடன் இணைந்து ஓர் அரசு அலுவலரை நியமிக்கும். இவர் தனது தொகுதியின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கான சட்டபூர்வமான அதிகாரம் பெற்றவர்.

18. **மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்** (Electronic Voting Machine):- இக்கருவி தேர்தலின் போது வாக்காளர் தனது வாக்கைப் பதிவு செய்யப் பயன்படுகிறது. இது கட்டுப்பாட்டுப் பகுதி (Control Unit) மற்றும் வாக்களிக்கும் பகுதி (Ballot Unit) என இரண்டு பகுதிகளைக் கொண்டது. இவை இரண்டும் ஐந்து மீட்டர் கம்பி வடம் மூலம் இணைக்கப்பட்டிருக்கும். வாக்குப் பதிவு அலுவலர் வாக்குச்சீட்டினை அளிப்பதற்குப் பதிலாக கட்டுப்பாட்டுப் பகுதி(Control Unit)யில் உள்ள பொத்தானை அழுத்துவார். இதன் பிறகே வாக்காளர் வாக்களிக்கும் பகுதி(Ballot Unit)யில் தான் வாக்களிக்க உள்ள வேட்பாளரையும் சின்னத்தையும் உள்ளடக்கிய நீல நிறப் பொத்தானை அழுத்தி வாக்களிக்க முடியும்.

19. **தேர்தல் நடத்தை விதிகள்** (Model Code of Conduct):– தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களிடம் நடவடிக்கைகள் குறிப்பாக அரசியல் உரையாடல்கள், தேர்தல் நாள் மற்றும் வாக்குச்சாவடியில் அவர்களின் நடவடிக்கைகள், தேர்தல் அறிக்கைகள், ஊர்வலங்கள் குறித்தும் மற்றும் பிற நடத்தைகள் குறித்தும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட வழிமுறைகள் ஆகும். இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நாள்





## 15. சுருக்கம் மற்றும் சொல் விளக்கம்

1. **சட்டமன்றத் தொகுதி (Assembly Constituency):–** ஒவ்வொரு தொகுதியிலும் வாக்காளர் எண்ணிக்கை சமமான அளவில் அமையும்வண்ணம், தேர்தல் நடைபெறும் மாநிலம் பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்படும்.

2. **வாக்குப்பதிவு** (Ballot):- வாக்குச்சீட்டு மூலம் இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் தேர்தலில் இரகசிய வாக்களிப்பு முறை அல்லது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலம் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத் தேர்தல்களில் வாக்களிக்கும் முறை.

3. **வாக்குப் பதிவுப் பெட்டி** (Ballot Box) :– வாக்காளர் தாம் வாக்களித்த வாக்குச்சீட்டினை செலுத்தும் முத்திரையிடப்பட்டு மூடப்பட்டுள்ள பெட்டி

4. **வாக்குச்சீட்டு (Ballot Paper):-** ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கியுள்ள காகிதச் சீட்டு. இச்சீட்டில், வாக்காளர் தாம் விரும்பிய வேட்பாளரின் பெயரின் எதிரே ✓ குறியிட்டு அதனை வாக்குப்பதிவுப் பெட்டியில் இடுவர்.

5. **வாக்குச்சாவடி நிலை அலுவலர்** (Booth Level Officer(BLO))–மாநில அரசின் அலுவலரான இவர், தனது பகுதியின் வாக்காளராகவும் அப்பகுதியிலுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் நன்கு தெரிந்தவராகவும் இருப்பார். இவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள வாக்காளர்களின் விவரங்களைச் சேகரித்தல், சரி பார்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளை வாக்காளர் பதிவு அலுவலரின் மேற்பார்வையில் செய்கிறார்.

6. **பரப்புரை** (Campaign)–அரசியல்வாதி அல்லது அரசியல் கட்சிகள் தங்களுக்கு வாக்களிக்க, மக்களிடம் செய்யும் முயற்சி.

7. **வேட்பாளர்** (Candidate)–தேர்தலில் போட்டியிடும் நபரே வேட்பாளர் எனப்படுவர்.

8. **தலைமைத் தேர்தல் அதிகாரி** (Chief Electoral Officer (CEO):– ஒரு மாநிலத்தில் நடைபெறும் தேர்தலையும், அதனையொட்டிய பணிகளையும் மேற்பார்வையிட, வழிநடத்த மற்றும் கட்டுப்படுத்துவதற்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட ஓர் அரசு அதிகாரி. மேலும் இவர், ஒரு மாநிலத்தின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் போன்ற பணிகளையும் மேற்பார்வையிடுவார்.

9. **தொகுதி** (Constituency):– தொகுதி வாக்காளர்களால் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் பகுதியாகும்.

10. **மாவட்டத் தேர்தல் அலுவலர்** (District Election Officer(DEO)):– இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு மாவட்ட நிர்வாகத்தின் தலைமையை (மாவட்ட ஆட்சியர், துணை ஆணையர் அல்லது மாவட்ட நீதிபதி) மாவட்டத் தேர்தல் அலுவலராக நியமிக்கிறது. மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியின் வழிகாட்டுதலுக்கு இணங்க, இவர் நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றும் மேலவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் திருத்தம் தொடர்பான பணிகளை தனது சட்ட அதிகாரத்திற்குட்பட்ட மாவட்டத்தில் மேற்கொள்வார். தேர்தல் காலங்களில் வாக்குச்சாவடிகளை அமைத்தல், வாக்குச்சாவடி பட்டியல்களை வெளியிடுதல் மற்றும் ஊழியர்களை நியமித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்வார்.





(v) எதிர்கால வாக்காளர்களின் திறன் மேம்பாட்டிற்காக தேர்தல் கல்வியறிவு சாதனங்களை உபயோகப்படுத்தி பயிற்சி அளித்தல். ஒருங்கிணைந்து திறன் வளர்க்க ஏற்பாடு செய்தல்.

(vi) புதிய தகவல் தொகுப்புகளை உருவாக்க முயன்று, அதனை மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு அனுப்பி வைத்தல்.

(vii) மாணவர்கள் / செயற்குழுவுடன் கலந்தாலோசித்து, நிகழாண்டிற்கான செயல்பாடுகளின் அட்டவணை ஒன்றை உருவாக்குதல்.

(viii) 12 ஆம் வகுப்பு மாணவர்கள் வாக்களிக்கத் தகுதி பெறும்போது, அவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கு வசதி செய்தல்.

குறிப்பு:- ஒருங்கிணைப்பு அலுவலர், தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளில், செயற்குழு உறுப்பினர்களை ஈடுபடுத்துவார்.

### 6. ஒருங்கிணைப்பாளர் (Convener)

ஒவ்வொரு வகுப்பிலும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை நடத்த ஆசிரியர் ஒருவர் இருப்பார். மாற்றாக, பல்வேறு வகுப்புகளின் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்முறைகளை நடத்தும் ஆசிரியர்களின் குழு ஒன்றும் இருக்கலாம். ஆசிரியர்களுக்கான பயிற்சி, ஒருங்கிணைப்பு அலுவலரால் அளிக்கப்படும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை நடத்துவதில், ஒருங்கிணைப்பு அலுவலரின் வழிகாட்டுதலோடு ஆசிரியர்கள் செயல்படுவர்.

### 7. இடம்

பெரும்பான்மையான தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகள் அந்தந்த வகுப்பறைகளில் நடைபெறும். இருப்பினும் சில பயிற்சிகள் பள்ளி அரங்கில் அல்லது பள்ளி விளையாட்டு மைதானங்களில் நடைபெறும்.

### 8. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமர்வுகள்

அமர்வுகள் பயிற்சிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். மேலும் சில பயிற்சிகளை ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் கல்வியறிவுக் குழுக்களால் சேர்ந்து நடத்தப்படலாம். வெவ்வேறு நிலையிலான தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் தனித்தனி பயிற்சிகளைக் கொண்டிருக்கலாம். எனவே, அவற்றிற்காக வரையறுக்கப்பட்டிருக்கும் கால அளவு /அமர்வுகள், கல்வியாண்டில் மொத்தம் 6லிருந்து 8 மணிக்குள் வேறுபடலாம்.





## 9. முன்மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை

தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை நடத்தும்போது வரிசையாகச் செய்ய வேண்டிய செயல்பாடுகள் குறித்த அட்டவணை வருமாறு :

| மாதம் | செயல்முறை | நேரம் |
|---|---|---|
| ஆண்டு முழுவதும் | குடியரசுச் சுவர்-சுவர் இதழ் | வடிவமைப்பின் மீது 60 நிமிடங்கள் வகுப்பில் கலந்துரையாடல் |
| ஏப்ரல் | நிர்வசித்ரா–திரைப்படம் | 45 நிமிடங்கள் |
| மே–ஜுன் | வாக்காளர் பதிவு தொடர்பான செயல்பாடு | வீட்டுப்பாடம் செய்வது குறித்த விளக்கம் 30 நிமிடங்கள் |
| செப்டம்பர் | இவர்களில் எவருமில்லை (NOTA) | 30 நிமிடங்கள் |
| அக்டோபர் – நவம்பர் | முன்னேறுதல் | 60 நிமிடங்கள் |
| ஜனவரி (தேசிய வாக்காளர் தினம்) (NVD) | ஓவியம் மற்றும் சுவரொட்டி தயார் செய்யும் போட்டி | 60 நிமிடங்கள் |
| மொத்தம் | | தோராயமாக 3 மணி நேரம் கூடுதலாக, வீட்டுப்பாடம் செய்வதற்கு (நிர்வசித்ரா-நேரம் கணக்கிடப்படவில்லை) |

## 10. செயல்பாடுகள்

10–ம் வகுப்பிற்கான தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வழிகாட்டியான இந்நூல், விரிவான ஆறு செயல்முறைகளையும் அதனை நடத்த வேண்டிய முறைகளையும் கொண்டுள்ளது. இதில், சுவர் இதழ் செயல்பாடானது, குழுவினரால் மாதாந்திர அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அனைத்து செயல்பாடுகளையும் நடத்த வேண்டிய கட்டாயமில்லை; அவற்றை கிடைக்கும் நேரத்தைப் பொறுத்து நடத்தலாம்.



## கதாபாத்திர மதிப்பீட்டுத் தாள்

ஒருங்கிணைப்பாளரின் உதவியாளர் இத்தாளில் குறிப்பு எழுதுவார். ஒருவர் “ஆம்” என்று பதிலளித்து ஒரு அடி முன்வைத்தால் அதற்கு (+) அடையாளம் குறிக்கப்படும். ஒருவர் “இல்லை” என்று பதிலளித்து ஒரு அடி பின்னே எடுத்து வைத்தால் (–) என்ற அடையாளம் குறிக்கப்படும். ஒருவர் தெரியாது என்று பதில் அளித்து அதே இடத்தில் ( 0 ) அடையாளம் குறிக்கப்படும்.

| கேள்வி எண்: | தமிழகத்திலுள்ள கிராமப்புற பெண்கள் | இராணுவ வீரர் | இளம் கல்லூரி இளைஞர் | குடிபெயர்ந்த தொழிலாளர் | மாற்றுத் திறனாளிப் பெண்கள் | கர்நாடகாவைச் சேர்ந்த இளைஞர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| 6 | | | | | | |
| 7 | | | | | | |
| 8 | | | | | | |
| 9 | | | | | | |
| 10 | | | | | | |



## எடுத்துக்காட்டு :

கிருஷ்ணவேணி என்பவர் சக்கர நாற்காலி உதவியுடன் வாழ்ந்து வரும் மாற்றுத் திறனாளிப்பெண், கேள்விகள் கேட்ட போது இரண்டு அடி பின்னால் சென்றவர்.

- யாருடைய உதவியுமின்றி தனியாக ஒரு வாக்குச் சாவடிக்கு உங்களால் செல்ல முடியுமா ?
- உங்கள் நண்பர்கள், வாக்குச் சாவடி நிலை அலுவலர் மற்றும் உறவினர்களின் உதவியின்றி வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரை உங்களால் சரிபார்க்க முடியுமா ?

அவரது அனுபவங்களை பின்வருமாறு, அதாவது, நான் சக்கர நாற்காலி உதவியுடன் வாழ்ந்து வருகிறேன். எனவே, நான் வாக்குச் சாவடிக்குச் செல்ல இயலாதநிலை உள்ளது. மேலும், என்னால் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாது. எனவே, வாக்காளர் பட்டியலில் உள்ள எனது பெயரை என்னால் சரிபார்க்க இயலாது என்பன போன்ற பதில்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர், வாக்குச்சாவடிகளில் உள்ள வசதிகளை எடுத்துக் கூறுதல் வேண்டும். எ.கா. சரிவுப் பாதைகள் , தன்னார்வலர்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் பயன்பாடு. வாக்குச்சாவடிகள் கீழ்தளத்தில் அமைக்கப்பட்டிருத்தல், வாக்குப் பதிவின் போது மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் முன்னுரிமைகள், வாக்காளர் பட்டியலில் கைபேசி / NVSP மூலமாக பெயரை சரிபார்க்க செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு போன்றவை குறித்து கூறுதல்.







## 11. அமர்வின் அமைப்பு

ஒவ்வொரு தேர்தல் கல்வியறிவுக் குழுவும் கொடுக்கப்பட்ட அமர்வின் அமைப்பைப் பின்பற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**கூடுமிடம்**–தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடும் பொழுது ஒருவரையொருவர் வணக்கம் கூறி வரவேற்க வேண்டும். பின்பு ஒருங்கிணைப்பாளர் முந்தைய அமர்வின் தொகுப்பை 5 முதல் 10 நிமிடத்திற்குள் தொகுத்துரைக்க வேண்டும்.

**நடத்த வேண்டிய செயல்பாடுகள்**–ஓர் அமர்வில் நடத்தப்பட வேண்டிய செயல்பாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைப்பாளர் ஏற்கனவே திட்டமிட்டபடி கொடுக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

**3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்**–அனைத்து செயல்பாடுகளும் தனிநபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு நினைவூட்டல் முறையில் பின்பற்றப்பட வேண்டும்.

(ஒருங்கிணைப்பாளர் வகுப்பிலுள்ள மாணவர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்):-

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட மூன்று செயல்பாடுகள்
- மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய இரண்டு செயல்பாடுகள்
- எந்த ஒரு செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள், செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)

## 12. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அணுகுமுறை:-

தேர்தல் கல்வியறிவுக் குழுவில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களும் பங்கு பெற முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

- மாற்றுத் திறனாளி மாணவர்கள் இதில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், பிற மாணவர்களை இது தொடர்பாக தெரிந்துகொள்ள ஊக்கப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- இக்குழு நடைபெறும் இடத்திற்குச் செல்ல அவர்களுக்கு ஏதுவாக வழிவகை செய்ய வேண்டும்.
- கேட்கும் குறைபாடு உள்ள மாணவர் இவ்வகுப்பில் கலந்துகொள்வார் எனில் சைகை மொழி பெயர்ப்பாளர் உடன் இருத்தல் வேண்டும் (அம்மொழி பெயர்ப்பாளர் மாணவரின் நண்பனாகவோ தெரிந்தவராகவோ இருக்கலாம்).
- இக்குழுவின் அனைத்து செயல்பாடுகளிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் விடுபடா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# 13. அறிவுரைகளுடன் கூடிய செயல்பாடுகள்

## செயல்பாடு: குடியரசுச் சுவருக்குப் பங்களித்தல்-சுவர் இதழ்

### கண்ணோட்டம்

சுவர் இதழ் ஒன்றை உருவாக்குவதற்கான சிந்தனையின் பின்னணி என்பது, தேர்தல் கல்வியறிவு குறித்த தகவல்களை உற்சாகமூட்டுவதாக, ஆக்கபூர்வமானதாக, அனைவரையும் ஈடுபடுத்தக் கூடியதாக, அனைத்து மாணவர்களையும் பங்கேற்கச் செய்யக் கூடியதாக உருவாக்கவும் பகிரவும் உருவானதாகும்.

இந்நோக்கத்திற்காக, பள்ளியின் முக்கியமான பகுதியில் இருக்கும் **சுவர்** பயன்படுத்தப்படும். இது, **'குடியரசுச் சுவர்'** என அழைக்கப்படும். தேர்தல் கல்வியறிவு தொடர்பான பல்வேறு கருத்துகளை அச்சுவரில் ஒட்டியோ அல்லது குண்டூசியால் குத்தியோ அல்லது அனுமதிக்கப்படும் நேர்வில் வரைந்தோ கூட காட்சிக்கு வைக்கலாம்.

சுவர் இதழை, ஒன்பதாம் வகுப்பு தேர்தல் கல்வியறிவுக் குழு நிர்வகிக்க வேண்டும். பத்தாம் வகுப்பு மாணவர்கள் தங்களின் கருத்துகளை அளித்து சுவர் இதழுக்குரிய பங்களிப்பை நல்கலாம்.

மாணவர்கள் பங்களிப்பைப் பொறுத்து, வாரந்தோறும் அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை சுவர் இதழின் மையக்கருத்தை மாற்றலாம்.

சுவர் இதழுக்கான கருப்பொருட்களை உருவாக்க, ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு ஏனைய வகுப்பு மாணவர்கள் உதவலாம்.

### சுவர் இதழுக்கான மையக் கருத்துகள்

சுவர் இதழுக்கான மையக் கருத்துகள் பின்வருவன:–

1. குடியரசு: மக்களின் அரசு, மக்களால், மக்களுக்காக.
2. எனது வாக்கு எனது உரிமை.
   - வாக்கின் மதிப்பு
3. ஒவ்வொரு வாக்கும் சமமான மதிப்புடையது
4. வாக்காளராகப் பதிவு செய்தல்
   - 18 ஆண்டுகள்-தகுதியான வயது
   - வாக்காளர் பட்டியல்
5. வாக்காளர் அடையாள அட்டை / என்னுடைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை
6. தேர்தலில் யாரெல்லாம் போட்டியிடலாம் ?
   - தேவையான தகுதி
   - வேட்பாளராவதற்கான படிநிலைகள்



பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து புலம் பெயர்ந்து மயிலாடுதுறையில் பணிபுரியும் ஆண் தொழிலாளி.

25 வயதானவர், மணமானவர், மனைவியும் 2 வயதுக் குழந்தையும் உடன் வசிக்கின்றனர்.

8–ஆம் வகுப்பு வரை படித்தவர்



இராமநாதபுரத்திலிருந்து வந்து சியாச்சென்னில் பணியமர்த்தப்பட்டுள்ள இராணுவ வீரர்.

24 வயதானவர், மணமானவர், மனைவி இராமநாதபுரத்தில் சொந்த ஊரில் வசிக்கிறார். படித்தவர்.



விழுப்புரத்தில் உள்ள இளம் பையன்.

18 வயதானவன், கல்லூரியில் படிக்கிறான். மணமாகவில்லை.



சிவகங்கையில் வசிக்கும் சக்கர நாற்காலியில் உள்ள மாற்றுத் திறனாளி பெண்.

47 வயதானவர், படித்தவர்(பட்டதாரி),

மகன், மருமகளோடு வாழ்கிறார்.



மதுரை மாவட்டத்தில் ஒரு கிராமத்திலுள்ள பெண்

28 வயதானவர். 4 வயது மற்றும் 9 மாத வயது நிரம்பிய இரு குழந்தைகள், படிக்காதவர், விவசாயத் தொழிலாளி.



திருப்பத்தூரில் உள்ள நக்சல் பாதித்த பகுதியில் வாழும் இளைஞர்.

22 வயதானவர், மணமாகாதவர், 9–ஆம் வகுப்பு வரை படித்தவர். கிராமத்திலுள்ள அரசுப் பள்ளியில் பணிபுரிகிறார்.



# நோட்டா (NOTA)

**தேர்தல் நடத்தும் அலுவலரின் கையேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி:–**

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் ஆணைக்கிணங்க, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் / வாக்குச்சீட்டுகளில் நோட்டா (NOTA) தேர்வுரிமையைச் செயல்படுத்துவதற்காகப் பின்வரும் அறிவுரைகளை ஆணையம் வழங்குகிறது:–

தேர்தல் களத்தில் போட்டியிடும் யாதொரு வேட்பாளருக்கும் வாக்களிக்க விரும்பாத அத்தகைய வாக்காளர்களின் நன்மைக்காக, வாக்குச்சீட்டில் இறுதி வேட்பாளரின் பெயர் மற்றும் விவரங்கள் அடங்கிய பகுதிக்குப் பின்னர், "None of the Above" என்ற வார்த்தைகளில் எழுதப்பட்டிருக்கும் பகுதி ஒன்று அமைக்கப்பட வேண்டும். வாக்குச்சீட்டில், நோட்டா என்னும் தேர்வுக்கு நேராக அதன் சின்னம் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

இச்சொற்கள் வேட்பாளர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் அதே மொழியில் அல்லது மொழிகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

போட்டிக் களத்தில் பதினாறு வேட்பாளர்கள் இருக்கும் நேர்வில், "None of the Above" என்னும் தேர்விற்காக கூடுதல் வாக்குப் பதிவுப் பகுதி ஒன்று இணைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு, ஒரு வாக்களிக்கும் சாதனம் ஒன்றிற்கு மேல் பயன்படுத்தப்படும் நேர்வில், "None of the Above" என்னும் தேர்வு, இறுதியாக இணைக்கப்படும் வாக்களிக்கும் சாதனத்தில், இறுதி வேட்பாளருக்கான இடத்திற்குக் கீழே அமைக்கப்பட வேண்டும்.





7. நேர்மையான மற்றும் தெளிவான வாக்களிப்பு
   - தேர்தல் பரப்புரையில் செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்
   - தேர்தல் நடத்தை விதிகள் : வேட்பாளரின் தவறான செயல்பாடுகள் குறித்து யாரிடம் புகாரளிப்பது ?
8. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (Voter Verifiable Paper Audit Trail (VVPAT))
   - இரகசிய வாக்களிப்பு
   - மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் / வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி வாயிலாக செயல்படுத்தப்படும் தேர்தல் முறைகளின் மீதான நம்பகத்தன்மை
9. இவர்களில் எவருமில்லை (None of the above (NOTA))
   - நோட்டாவை எப்பொழுதெல்லாம் உபயோகிக்கலாம்.
   - உங்கள் வேட்பாளரைக் குறித்த முக்கிய தகவல்களை அறிந்திருத்தல்.
10. இந்தியத் தேர்தல் ஆணையம்-எதிர்– மாநில தேர்தல் ஆணையம் / தேசிய வாக்காளர் தினம்



## செயல்பாடு: நிர்வசித்ரா-படம் திரையிடல் / திருப்புத்தாள் காட்சிப்படுத்துதல்

### கண்ணோட்டம்:

தேர்தல் செயல்முறைகளையும் நடைமுறைகளையும் அறிந்து கொள்ளும்வண்ணம், ஆர்வமூட்டும் வகையில் அமைந்துள்ள இச்செயல்பாடு, திரைப்படம் / திருப்புத்தாள்(Flip chart) திரையிடுவதன் வாயிலாகவும், நகைச்சுவை நிகழ்ச்சிகளின் மூலமாகவும் தகவல்களைப் பரப்பும் வகையில் அறிமுகப்படுத்துகிறது.

**குறிப்பு:** இச்செயல்பாடு 10–ஆம் வகுப்பு தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்களுக்கு மட்டுமே நடத்தப்படும்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. வாக்காளராவதற்குத் தகுதியான வயது 18 ஆகும்.

ii. வாக்காளராகப் பதிவு செய்யும் நடைமுறைகளையும், படிவங்களையும் அறிதல்.

iii. வாக்கின் மதிப்பை அறிதல்

iv. தேர்தல் நடைமுறைகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலரின் (Booth Level Officer (BLO)) பங்கினை அறிதல் - அவரே வாக்காளரின் முதல் தொடர்பாளர் மற்றும் வழிகாட்டி

### ஆதாரங்கள்:

i. மஸ்த் தோஸ்தி மட்தன் (உயிர்ப்பூட்டப்பட்ட(animated) குறும்படம்-12 நிமிடங்கள்)

ii. அபய் மற்றும் அபா-சித்திரப் புத்தகம்

iii. லோக்தந்த்ரா எக்ஸ்பிரஸ்-ஒலி வடிவக் கதை

iv) வாக்காளராகப் பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் தொடர்பான திருப்புத்தாள் காட்சி

குறிப்பு:– திரைப்படம் திரையிட இயலாத நேர்வுகளில் சித்திரப் புத்தகம், ஒலிவடிவக் கதை மற்றும் திருப்புத்தாள் காட்சி போன்றவற்றை உபயோகிக்கலாம்.

### தேவையான பொருட்கள்

i. திரை, படக்காட்சி இயந்திரம், மடிக்கணினி மற்றும் ஒலி பெருக்கிகள்

ii. ஒவ்வொரு மாணவருக்கும் குறிப்பேடு மற்றும் எழுதுகோல்

iii. தடித்த (Chart)தாள் மற்றும் தடித்த வண்ண எழுதுகோல்

**கால அளவு:** 45 நிமிடங்கள்

**கால வரையறை:** ஏப்ரல் முதல் வாரம்




| கூழாங்கற்கள் | நாற்காலி |
|---|---|
|  |  |
| **இவற்றுள் எவை உண்பதற்கான பொருள் ?** | |
| இறகுகள் | நோட்டா |
|  | NOTA |

| வாழைப்பழம் | பாதுகாப்பு ஊசி (Safety Pin) |
|---|---|
|  |  |
| **இவற்றுள் எவை சிறுசெடியை நடுவதற்காக குழி தோண்ட உதவும் ?** | |
| மருத்துவ ஊசி | நோட்டா |
|  | NOTA |



# நோட்டா (NOTA)

| தரை விரிப்பு | பீப்பாய் |
|---|---|
|  |  |
| **இவற்றுள் எவை போக்குவரத்து வாகனமாகப் பயன்படும் ?** | |
| கோழி | நோட்டா |
|  |  |

| குதுப்மினார் | தாஜ்மஹால் |
|---|---|
|  |  |
| **இவற்றுள் எவை இந்தியச் சின்னம் அல்ல ?** | |
| செங்கோட்டை | நோட்டா |
|  |  |





## முறை:

1. படம் திரையிடுவதற்கு / திருப்புத்தாள் காட்சிப்படுத்துதலுக்கு முன்னர், ஒருங்கிணைப்பாளர், வாக்காளர் பதிவு என்னும் தலைப்பு குறித்து மாணவர்களுக்குப் பழக்கப்படுத்தும் நோக்கிலும், மாணவர்களின் எண்ணங்களை சுருக்கமாக அளவிடும் நோக்கிலும், தேர்தல்கள் மற்றும் பங்களிப்பு தொடர்பான ஒரு சிறிய கலந்துரையாடலுக்கு மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.
2. ஒருங்கிணைப்பாளர் பின்வரும் வினாக்களைக் கேட்டு கலந்துரையாடலைத் தொடங்கலாம்:–
   - இந்தியாவிலுள்ள அரசு அமைப்பைக் குறித்து தெரிவி ?
   - குடியரசு என்றால் என்ன ?
   - குடியரசு ஆட்சி முறை ஏன் புகழ் வாய்ந்ததாக இருக்கிறது ?
   - குடியரசில் நம் ஒவ்வொருவரின் குரலையும் கேட்க வைப்பதற்கான வழி முறை என்ன ? (தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி மூலம்)
   - குடியரசு நாட்டில் நம் பிரதிநிதிகளை எவ்வாறு நாம் தேர்ந்தெடுக்கின்றோம் ? (தேர்தல்கள்)
   - நம் ஒவ்வொருவரின் குரலையும் கேட்க வைப்பதற்கான காரணி எது ? ( ஒரு வாக்கு)
   - தேர்தல்கள் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதுகின்றீர்களா ? உங்கள் வாக்கு ஏன் முக்கியமாகிறது ?
3. இந்தியாவின் இளைய மற்றும் வருங்கால வாக்காளர்களைக் கொண்ட, 14 முதல் 17 வயது வரையுள்ள மாணவர்களிடம், அவர்களுக்கு 18 வயது நிறைவடைந்த பின்னர் ஒவ்வொருவரும் வாக்களிப்பது எவ்வளவு முக்கியமானது என்பது குறித்து ஒருங்கிணைப்பாளர் உரையாற்ற வேண்டும்.
4. வாக்களிக்கத் தயாராக இருக்கிறார்களா எனத் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்களிடம் ஒருங்கிணைப்பாளர் கேட்க வேண்டும்.
5. ஒருங்கிணைப்பாளர் கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டு, படத்தைத் திரையிடலாம். படம் திரையிட இயலாத நிலையில் திருப்புத்தாள், சித்திரப் புத்தகம் அல்லது ஒலிவடிவக் கதை போன்ற நிகழ்ச்சிகளை நடத்தலாம்.
6. பின்னர், வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து, வகுப்பில் பெரிய அளவிலான விவாதம் நடத்த வேண்டும். மாணவர்கள், தேர்தல் குறித்த தங்களது முதல் நினைவலைகளை, பெற்றோர்/ காப்பாளர் / உறவினர் / அண்டை வீட்டினர் என எவரிடமிருந்தேனும் கேட்டறிந்ததை மீண்டும் நினைவுகூரத் தூண்ட வேண்டும்.
7. பின்னர் மாணவர்களுக்கு தடித்ததாள் (Chart) மற்றும் வண்ண எழுதுகோல்களைக் கொடுத்து, அவர்களைப் பொறுத்தவரையில் படத்தின் மிக முக்கியமான, தங்களைக் கவர்ந்த காட்சி குறித்து சுவரொட்டி தயாரித்தல் அல்லது தேர்தல்கள் மற்றும் வாக்களிப்பின் முக்கியத்துவத்தைக் கூறுதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும்.









8. ஒருங்கிணைப்பாளர், வரைபடங்களைச் சேகரித்து அவற்றைப் பாதுகாப்பான இடம் ஒன்றில் வைக்க வேண்டும். வருங்காலங்களிலும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமைவிடங்களை அலங்கரிக்க அல்லது தேசிய வாக்காளர் தினத்தன்று நடைபெறும் கண்காட்சிக்குப் பயன்படும் என்பதால், வரைபடங்கள் கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

9. **3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்:**

தனி நபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து செயல்பாடுகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்றப் படவேண்டும். ஒருங்கிணைப்பாளர் வெவ்வேறு நபர்களிடம் கீழ்க்கண்டவற்றை வினவலாம்.

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
- மனதில் வைத்து கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
- எந்த **ஒரு** செயல்பாடு பற்றி அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள், செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)








## 14. செயல்பாடுகளுக்கான தகவல் தொகுப்புகள்

### வாக்காளர் பதிவுக்கான களப்பணி: தகவல் திரட்டுக்கான படிவம்

| வ. எண். | முகவரி | வீட்டில் உள்ள மொத்த வாக்காளர்கள் | அவர்களில் பதிவு செய்த வாக்காளர்கள் | பதிவு செய்யப் பட்டவர்களுள் எத்தனை நபர்களிடம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை உள்ளது | பதிவு செய்யப் பட்டவர்களுள் எத்தனை நபர்களிடம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை இல்லை | தகுதி இருந்தும் பதிவு செய்யாத வர்கள் | 14 முதல் 17 வயது வரை உள்ள பிள்ளைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |
| 6 | | | | | | | |
| 7 | | | | | | | |
| 8 | | | | | | | |
| 9 | | | | | | | |
| 10 | | | | | | | |
| 11 | | | | | | | |
| 12 | | | | | | | |
| 13 | | | | | | | |
| 14 | | | | | | | |



## செயல்பாடு: தேசிய வாக்காளர் தினத்திற்கான செயல்முறை: ஓவியம் மற்றும் சுவரொட்டி தயாரித்தல் போட்டி

இப்போட்டியின் தலைப்புகள் தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவ மக்களாட்சியைச் (Representative Democracy) சார்ந்ததாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக

- ஒவ்வொரு வாக்கும் இன்றியமையாதது.
- எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது.
- வலுவான மக்களாட்சிக்கு உயரிய பங்களிப்பு
- தெளிவான மற்றும் நெறிமுறை சார்ந்த வாக்களிப்பு
- அணுகத்தக்க தேர்தல்கள்.





## செயல்பாடு: வாக்காளராகப் பதிவு செய்வதற்கான களப்பணி (கோடை விடுமுறைக்கான செயல்பாடு)

### கண்ணோட்டம்:

களப்பணி என்பது தேர்தலில் வாக்காளராகப் பதிவு செய்யும் செயல்முறைகள் தொடர்பானதாக அமைவது. மாணவர்களை வாக்காளர் கல்வியில் ஆர்வத்துடன் பங்கு கொள்ள வழிவகை செய்கிறது. இந்த விளையாட்டின் மூலம் மாணவர்கள், வாக்காளர் பட்டியல், வாக்காளராகப் பதிவு செய்வதற்கான படிவங்கள், தேசிய வாக்காளர் சேவை இணையதளம் (National Voters Service Portal (NVSP)) ஆகியவற்றைத் தெரிந்து கொள்வதுடன், தங்களின் பக்கத்து வீடுகளில் வசிப்போரிடம் வாக்காளராகப் பதிவு செய்வது குறித்து வழிகாட்ட வேண்டும்.

**குறிப்பு:–** கோடை விடுமுறையில் மாணவர்களால் இச்செயல்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

### கற்றலின் விளைவு:

செயல்பாடு முடிந்தவுடன் மாணவர்கள் கீழ்க்கண்டவற்றைக் குறித்து அறிந்திருக்க வேண்டும்.

(i) சட்டமன்றத் தொகுதி என்றால் என்ன ?

(ii) வாக்காளர் பட்டியல் என்றால் என்ன என்பது குறித்தும், அப்பட்டியலில் ஒருவரின் பெயர் இடம் பெறுவது பற்றியும் தெரிந்து கொள்வது.

(iii) வாக்காளராகப் பதிவு செய்ய படிவம் 6 மற்றும் அதனைப் பூர்த்தி செய்வது எவ்வாறு என்பது குறித்து தெரிந்து கொள்வது.

(iv) படிவம்–7, படிவம்–8 ஆகியவை குறித்தும் அவற்றைக் கொண்டு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள வாக்காளரின் விபரங்களை சரிசெய்வது குறித்தும்.

(v) மாணவர்களின் தொகுதியைச் சார்ந்த வாக்குச் சாவடி நிலை அலுவலரைக் குறித்து தெரிந்து கொள்வது.

(vi) வாக்காளராகப் பதிவு செய்வதற்குப் பயன்படும் தேசிய வாக்காளர் சேவை இணையதளம் (National Voters Service Portal (NVSP)) என்றால் என்ன என்பது குறித்து தெரிந்து கொள்வது.

(vii) ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக வாக்காளராகப் பதிவு செய்ய அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

### தேவையான பொருட்கள்

i) உள்ளூர் வாக்காளர் பட்டியல்

ii) வாக்காளர்களுக்கான வழிகாட்டிக் கையேடு

iii) பதிவு செய்யாத வாக்காளர்களை தொடர்பு கொள்வதற்கான வழிமுறை.

iv) பொதுவாகக் கேட்கப்படும் வினாக்களும் விடைகளும் (சுருக்கம் மற்றும் சொல்விளக்கம் பகுதியில் உள்ளவற்றை அறிந்து கொள்வது )

**கால அளவு :** 30 நிமிட விளக்கம்

வார இறுதி நாட்கள்/ஓய்வு நாட்கள் / விடுமுறை காலம் ஆகியவற்றில் நடத்தப்பட வேண்டும் ; தரநிலை மற்றும் மதிப்பெண்கள் வழங்கப்படலாம்.

**கால வரையறை :** மே-ஜுன்

**தயாரிப்புமுறை :**

ஒருங்கிணைப்பாளர், களப்பணி குறித்து விளக்கம் அளிப்பதற்கு முன்னர், வாக்காளருக்கான பொது கையேட்டை (General Voters Guide) படித்து அறிந்து கொள்ள வேண்டும்.

**முறை :**

1. வாக்காளர் பதிவு செய்தல் என்ற தலைப்பினை நோக்கமாகக் கொண்டு, ஒருங்கிணைப்பாளர் மாணவர்களை, தேர்தல் மற்றும் அதில் பங்கேற்பது குறித்த கலந்துரையாடலில் ஈடுபடுத்த வேண்டும். சட்டமன்றத் தொகுதிகள் குறித்து வலியுறுத்திக் கூறப்பட வேண்டும். இவை, முந்தைய வகுப்புகளில் இடம் பெற்றுள்ளன. இக்கலந்துரையாடல் பின்வரும் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
   - i) சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் வாக்குச் சாவடிகள்
   - ii) வாக்காளர்களின் வகைகள் - பொது வாக்காளர்கள், முப்படைகளில் பணியில் உள்ளவர்கள், வெளிநாடுவாழ் வாக்காளர்கள் மற்றும் அவர்களின் தகுதிகள்
   - iii) பல்வேறு படிவங்கள்– 6 6A, 7, 8, 2, 2A, 3
   - iv) இணைய வழியில் பதிவு செய்வதற்கான National Voters Service Portal (NVSP) இணையதளம், தலைமைத் தேர்தல் அதிகாரி / மாவட்டத் தேர்தல் அதிகாரியின் இணையதள முகவரி.
2. இச்செயல்பாடுகள் குறித்து ஒருங்கிணைப்பாளர் மாணவர்களுக்குக் கூற வேண்டியவை வருமாறு :
   - a) மாணவர்கள் முதலில் அவர்கள் சார்ந்த மாநிலத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளத்தைப் பார்வையிடுதல் வேண்டும். அதிலிருந்து, அவர்களது பகுதியின் வாக்காளர் பட்டியலைப் பதிவிறக்கம் செய்தல் வேண்டும்.
   - b) மாணவர்கள், அவர்களது பக்கத்து வீடுகளில் உள்ள வாக்காளர்களின் பதிவுநிலை குறித்த தகவல்களை கோடைக் கால விடுமுறையில் சேகரித்தல் வேண்டும். இத்தகவல், மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட படிவம் ஒன்றில் சேகரிக்கப்படுகிறது. தகுதியான வாக்காளர்கள் பதிவு செய்யாமல் விடுபட்டிருந்தால் மாணவர்கள் அவர்களுக்குத் தேவையான தகவல்களைத் தெரிவிப்பதன் வாயிலாக உதவலாம். இணைய வழியில் www.nvsp.in என்ற இணையதளத்தின் மூலமாகப் பதிவு செய்வதற்கு உதவலாம்.
   - c) வீடுகளில் உள்ள வருங்கால வாக்காளர்களை (14லிருந்து 17 வயது உள்ளவர்கள்), மாணவர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்காக ஊக்குவிக்க வேண்டும் . மேலும் தகுதியான வாக்காளர்களைப் பதிவு செய்யவும், வாக்களிக்கவும் தேவையான உதவிகளையும் செய்தல் வேண்டும்.





- இதற்கு மாற்றாக இடம் பெயர்ந்த ஒருவர் தனது பழைய தொகுதிக்கே சென்று வாக்களிக்கலாம்.
- வாக்காளர்கள் எளிதில் வாக்களிக்க ஏதுவாக அவர்கள் இருப்பிடத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவிற்குள் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும்.
- ஏதேனும் உதவி தேவைப்பட்டால் 1800–11–1950 என்ற தேசிய தொடர்பு நிலையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.
- வாக்குச்சாவடி நிலை அலுவலர், வாக்காளராகப் பதிவு செய்வதற்கு உதவி புரிவார்.
- வாக்குச்சாவடி நிலை அலுவலர், மாவட்டத் தேர்தல் அதிகாரி, வாக்காளர் பதிவு அதிகாரி மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரி ஆகியோரிடம் உதவியோ, தகவலோ பெறுவதற்கு உதவி மையம் (இலவச தொலைபேசி எண்கள்) மூலமாகத் தொடர்பு கொள்ளலாம்.
- மாநில தேர்தல் அதிகாரி மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளமானது வாக்குச் சாவடியின் இருப்பிடத்தை கூகுல் வரைபடம் மூலமாக வழங்குகிறது.
- www.nvsp.in என்ற வாக்காளர் இணையதள சேவையானது தேர்தல் குறித்த தகவல்களைத் தருவதோடு நேரடியாக வாக்காளராகப் பதிவு செய்வதற்கும் உதவுகிறது.
- வாக்காளர் பட்டியலை மாவட்டத் தேர்தல் அலுவலர் / தலைமைத் தேர்தல் அதிகாரி இணையதளத்திலும் காணலாம்.
- தேர்தலுக்கு இரண்டு நாட்கள் முன்பு அனைவருக்கும் வாக்காளர் சீட்டுகள் (Voter Slips) வழங்கப்படும். அவ்வாக்காளர் சீட்டே வாக்களிக்கும் போது அடையாளச் சான்றாக கருதப்படும்.
- சாய்வு தளம், தன்னார்வலர்கள், சக்கர நாற்காலி என அனைத்து வசதிகளும் வாக்குச் சாவடிக்கு வழங்கப்படும். மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு வாக்குப் பதிவின் போது வாக்களிக்க முன்னுரிமை அளிக்கப்படும்.
- மோதல்கள் நிறைந்த இடங்களில் **மத்திய ரிசர்வ் பாதுகாப்பு மற்றும் எல்லைப் பாதுகாப்புப்படையினரின் உதவியுடன் பாதுகாப்பானது இருமடங்காக** இந்தியத் தேர்தல் ஆணையத்தால் பலப்படுத்தப்படும்.





8. யாருடைய உதவி மற்றும் பயமின்றி ( பயம் என்பது பாதுகாப்புக் காரணங்கள் மற்றும் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் அனுமதி பெறாதது போன்றவை ) உங்களது வாக்குச் சாவடிக்கு உங்களால் செல்ல முடியுமா ?

9. நீங்கள் வாக்களிக்க வேண்டிய வேட்பாளர் குறித்து உங்களால் சுதந்திரமாக முடிவெடுக்க முடியுமா ?

ஒருங்கிணைப்பாளர், வாக்குப்பதிவு மற்றும் வாக்காளர் பதிவு செய்தல் பற்றிய விளையாட்டு அட்டைகளைப் பயன்படுத்தி வாக்காளர் வாக்களிக்க தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வசதிகளைக் குறித்து விளக்க வேண்டும். எடுத்துக்காட்டாக:

- தேர்தல் சின்னங்கள் அனைத்தும் வாக்குச் சீட்டு / மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளதால், படிப்பறிவற்ற வாக்காளர்கள் சின்னங்களைப் பார்த்து வாக்களிப்பர். வேட்பாளரின் சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படமும் வாக்குச் சீட்டு / மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் காட்சிப் படுத்தப்படும்.
- வாக்குச் சாவடி நிலை அலுவலர் படிப்பறிவில்லாத மக்களை வாக்காளராகப் பதிவு செய்ய உதவி செய்வார்.
- வாக்குச்சாவடியில் வாக்களிக்க பல்வேறு அடையாளச் சான்றுகள் ஏற்றுக் கொள்ளப்படும். அவை குறித்த பட்டியல் தேர்தலுக்கு முன்பு வெளியிடப்படும்.
- வயது ஆதாரத்திற்காக பல்வேறு ஆவணங்கள் பதிவு செய்ய ஏற்றுக் கொள்ளப்படும். அவை: பிறப்புச் சான்றிதழ், பத்தாம் வகுப்புச் சான்றிதழ், இந்தியக் கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம் அல்லது ஆதார் அட்டை.
- பதிவு செய்வதற்கு இருப்பிடச் சான்று தேவைப்படும். கிராமத்தில் வசிப்பவர்களுக்கு, அக்கிராமத்தின் மூத்த குடிமகன் அளிக்கும் சான்றிதழே ஆதாரமாகக் கருதப்படும்.
- இருப்பிடச் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுபவை: கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம், உணவுப் பொருள் வழங்கல் அட்டை, குடிநீர் / தொலைபேசி / மின்சாரம் / எரிவாயு இணைப்புச் சீட்டு அல்லது வங்கிக் கணக்குப் புத்தகம்.
- தேர்தல் நாள் அன்று தனியார் ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்படும். இதனை உறுதிப்படுத்த தேர்தலுக்கு முன் இது தொடர்பான ஆணை வெளியிடப்படும்.
- வாக்காளர் வெவ்வேறு தொகுதிகளில் ஒரே நேரத்தில் வாக்காளராகப் பதிவு செய்ய முடியாது.
- ஒருவர் ஒரு தொகுதியை விட்டு இன்னொரு தொகுதிக்கு குடியேறினால், படிவம் எண்: 6 பூர்த்தி செய்து புதிய தொகுதியில் பதிவு செய்ய வேண்டும். அதே படிவத்திலே பழைய தொகுதியில் பெயர் நீக்கத்திற்கான அறிவிப்புப் பகுதியை நிரப்ப வேண்டும்.





d) மாணவர்கள் முதலில் இப்பயிற்சியை தங்களது வீட்டில் உள்ளவர்களுக்கும் பின்னர் அவர்களின் பக்கத்திலுள்ள 10 அண்டை வீடுகளிலும் செய்தல் வேண்டும். இயன்றவரை அவர்களை வாக்காளராகப் பதிவு செய்வதற்கு உதவலாம்.

3. பதிவு செய்யும் நடைமுறைகள் மற்றும் தேர்தல் நடைமுறை பற்றி அண்டை வீட்டினருக்கு எழும் அனைத்து சந்தேகங்களையும் தீர்த்து வைக்கும் வகையில் தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்காக அவர்கள் வாக்காளருக்கான பொது கையேட்டை (General Voters Guide) படித்துப் பார்க்க வேண்டும்.

4. ஒருங்கிணைப்பாளர், முதலில் மாணவர்களிடம் அவர்கள் சார்ந்துள்ள தொகுதியின் பெயர் மற்றும் அவர்களது வாக்குச்சாவடி எது என்பதை www. nvsp.in இணையதளம் வாயிலாக கண்டறிய கேட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவரும் வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) மற்றும் வாக்குச்சாவடி அளவிலான அதிகாரிகளின் (BLO) பெயர்கள் மற்றும் தொடர்பு முகவரியைத் தெரிந்து கொள்ள வேண்டும். மாணவர்கள், தகவல்களைப் பெற மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளத்தைப் பார்வையிடுதல் வேண்டும். மாவட்டத் தேர்தல் அலுவலர்/ தலைமைத் தேர்தல் அலுவலரின் இணையதளத்தில் உள்ள கேள்விகள் மற்றும் பதில்களைப் பார்வையிடுதல் வேண்டும்.

5. மாணவர்கள், அண்டை வீட்டாரிடம் சென்று இது குறித்து கூறும் போது, எப்படி செயல்பட வேண்டும் எனவும், அவர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பது குறித்தும் மாதிரி செயல் விளக்கத்தை ஒருங்கிணைப்பாளர் வகுப்பிற்குள் நடத்த வேண்டும்.

6. மாணவர்கள் சேகரித்த தகவல்களுடன், தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு கட்டுரை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.



# செயல்பாடு: இவர்களில் எவருமில்லை (நோட்டா (NOTA)). ஒளிரும் அட்டை விளையாட்டு மற்றும் குழு கலந்துரையாடல் / விவாதம்

### கண்ணோட்டம் :

நோட்டா (NOTA) என்பதன் பொருள் இவர்களில் எவருமில்லை (None of the above) என்பதாகும்.

வாக்காளர், போட்டியிடும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களில் எவருக்கும் வாக்களிக்க விரும்பவில்லையெனில், அவர் நோட்டாவிற்கு வாக்களிப்பதன் மூலம் தனது வாக்கினைச் செலுத்த இயலும். இச்செயல்பாடானது மாணவர்களுக்கு நோட்டாவின் முக்கியத்துவத்தை அறிமுகப்படுத்துவதுடன், நமக்கு என்ன தேவை என்பதைத் தெரிந்து கொள்வதைப் போல், என்ன தேவை இல்லை என்பதைத் தெரிந்து கொள்வதும் முக்கியமானது என்ற செய்தியைத் தெரிவிக்கிறது.

### கற்றலின் விளைவு :

செயல்பாடு முடிவடைந்தவுடன் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டியவை:–

i. நோட்டா என்றால் என்ன ?

ii. ஒவ்வொரு வாக்கும் எண்ணப்படுகிறது-நோட்டா உட்பட

### தகவல் தொகுப்புகள் :

i. இவ்வழிகாட்டி நூலின் முடிவில் (பக்கம் 30) தகவல் தொகுப்புப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளதைப் போன்ற ஒளிரும் அட்டைகள்.

ii. விவாதங்களுக்கான அமைப்பு முறை கருத்துகள் அடங்கிய ஏற்பாட்டாளர்களுக்கான மாதிரிகள் ('முறை' என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள 4, 5, 8ம் பத்திகள். பக்கம் 20–21)

**கால அளவு :** 25 முதல் 30 நிமிடங்கள்.

**கால வரையறை :** செப்டம்பர்

### செயல்பாடுகள் பற்றிய விவரம்

ஒவ்வொரு ஒளிரும் அட்டையும் ஒரு கேள்வியையும், நான்கு விடைகளையும் கொண்டிருக்கும். எனினும் நான்கில் மூன்று விடைகள் தவறானதாகவும் வேடிக்கையானதாகவும் அமைந்திருக்கும். கடைசி விடையாக 'நோட்டா' அல்லது 'இவர்களில் எவருமில்லை' என்பது அமைந்திருக்கும், மாணவர்கள் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க கேட்டுக் கொள்ளப்படவேண்டும்.





11. ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு மாணவரும் பின்னோக்கி நகர்தலுக்கான காரணத்தைக் கேட்பார். ஒருங்கிணைப்பாளர் கதாபாத்திரங்களை அச்சூழ்நிலையுடன் ஒப்பிடுவார். பிறகு மாணவர்கள் சவால்களுக்கான தீர்வுகளை பரிந்துரைக்கக் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.
12. பின்னர், அனைத்து மாணவர்களும் தங்கள் பணிகளைச் செய்த போது சந்தித்த சிரமங்கள் / தடைகள் ஆகியவை குறித்து அனைவரிடமும் கலந்தாலோசிக்க வேண்டும்.
13. இவை ஏற்பாட்டாளரின் உதவியாளரால் நோட்டுப் புத்தகத்தில் அல்லது கரும்பலகையில் குறித்துக் கொள்ளப்பட வேண்டும்.
14. பின்னர், ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ள தடைகளைக் கடக்க, ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள தொடர்புடைய வசதிகள் குறித்து ஏற்பாட்டாளர் தெரிவிக்க வேண்டும். ஏற்பாட்டாளர் அனைத்து கேள்விகளுக்கான பதில்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

### ஒருங்கிணைப்பாளருக்கானது

செயல்பாடு முடிந்தபின்னர், ஒருங்கிணைப்பாளர் குறிப்பிட வேண்டிய முக்கிய கருத்தானது, வாக்களிக்கும் உரிமையானது நமக்கு அதிகாரம் அளிப்பதற்காக, அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள உரிமை ஆகும். இது மறுக்கப்படும்போது அதனைப் பெறுவதற்கான வசதிகளைக் கோருவது நமது உரிமை ஆகும். வாக்களிப்பது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு வயது வந்த குடிமகனின் உரிமை ஆகும். ஒவ்வொரு வாக்கும் சமமான மதிப்பை உடையதாகும் (போட்டி தொடங்குவதற்கு முன்னர் அனைவரும் ஒரே இடத்தில் நிற்பது இதையே குறிப்பிடுகிறது). தனி நபர்கள் தங்களுக்கு வாக்களிப்பதில் ஏற்படும் தடைகளைக் கடந்துவர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

### கேள்விகள்

1. தங்களால் ஏதேனும் ஒரு மொழியைப் படிக்க முடியுமா ?
2. ஏதேனும் அடையாள அட்டையினை வைத்துள்ளீர்களா ? எ.கா. குடும்ப அட்டை, ஆதார் அட்டை
3. உங்களிடம் வாக்காளர் அடையாள அட்டை உள்ளதா ? உங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா ?
4. நீங்கள் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள தொகுதியிலேயே தற்போதும் உள்ளீர்களா ?
5. நீங்கள் ஒருநாள் பணியை விட்டுவிட்டு வாக்களிக்கச் செல்வதற்கு இயலுமா ?
6. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உதவியின்றி வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரை உங்களால் கண்டறிய முடியுமா ?
7. தேர்தல் தொடர்பான கேள்விகளைக் கேட்க தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயர் உங்களுக்குத் தெரியுமா ?






**முறை :**

1. ஏற்பாட்டாளர் 6 மாணவர்களைத் தேர்வு செய்து குடுவை / பெட்டியிலிருந்து ஒளிரும் அட்டைகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுக்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்; அந்த அட்டைகளில் உள்ள பொறுப்புகளை அவர்களுக்கு ஒதுக்க வேண்டும்.
2. ஒளிரும் அட்டைகளில் ஒரு பக்கம் அக்கதாபாத்திரத்திற்குரிய படங்களையும் மற்றொரு பக்கம் பிற விவரங்களையும் கொண்டிருக்கும்.
3. ஒருங்கிணைப்பாளர் மாணவர்களிடம் தங்களின் கதாபாத்திரத்தின் தன்மையைப் புரிந்து கொண்டார்களா எனக் கேட்க வேண்டும். மாணவர்களுக்குப் புரியவில்லையெனில் அவர்களுக்கு கதாபாத்திரத்தின் தன்மையை விளக்கிக் கூற வேண்டும்.
4. போட்டி தொடங்குவதற்கு முன்னர், சாக்பீசுகளைக் கொண்டு தரையில் நேரான கோடுகளை வரைந்து, அவற்றில் அடுத்தடுத்து மாணவர்கள் நிற்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். ஒருங்கிணைப்பாளர் இந்த விளையாட்டில் யாருக்கும் வெற்றி அல்லது தோல்வி கிடையாது என்ற விவரத்தைத் தெளிவாக்க வேண்டும்.
5. பங்கேற்கும் ஒன்று அல்லது இரண்டு மாணவர்கள் ஒருங்கிணைப்பாளருக்கு உதவியாக இருத்தல் வேண்டும். அந்த உதவியாளர், தகவல் தொகுப்பில் உள்ள கேள்விகளிலிருந்து 9 கேள்விகளை மாணவர்களிடம் கேட்க வேண்டும். அதற்கு, அவர்கள், ஆம் அல்லது இல்லை என்ற பதில்களை மட்டுமே அளிக்க வேண்டும். மாணவர்கள் விரும்பினால் 'தெரியவில்லை' என்ற பதிலையும் அளிக்கலாம்.
6. மாணவர்கள் தங்களிடம் உள்ள ஒளிரும் அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கதாபாத்திரத்தில் தாங்கள் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு அந்த நிலையில் இருந்து தங்களது பதில்களை அளிக்க வேண்டும்.
7. மாணவர்கள் 'ஆம்' என்று பதில் அளிக்கும்போது ஒரு கட்டம் முன்னரும் 'இல்லை' என்ற பதில் அளிக்கும்போது ஒரு கட்டம் பின்னோக்கியும் நகர்ந்து கொள்ள வேண்டும். எப்பொழுதெல்லாம் மாணவர்கள், தெரியாது என்ற பதிலை அளிக்கின்றனரோ அப்பொழுது அதே கட்டத்தில் நிற்க வேண்டும்.
8. உதவியாளர் இந்த விளையாட்டின் கதாபாத்திரத்தில் பங்கேற்கும் ஒவ்வொரு மாணவரின் பதிலையும் தகவல் தொகுப்பில் இடம்பெற்றுள்ள மதிப்பீட்டுத் தாளில் குறித்துக் கொள்ள வேண்டும்.
9. கேள்விகள் அனைத்தும் முடிந்த பின்னர், ஏற்பாட்டாளரின் உதவியாளர் அதிகபட்சமாக முன்னேறியுள்ள மாணவருக்கு முன்பாக ஒரு முடிவுக்கோடு வரைதல் வேண்டும். இறுதியாக வரையப்பட்ட கோடு வாக்குச்சாவடியைக் குறிக்கும் மாணவர்கள் இந்தக் கோட்டை அடைபவரின் கைகளில் நிரந்தரமான மையால் ஒரு குறியீட்டை செய்ய வேண்டும்.
10. கேள்வி பதில் நேரம் முடிந்த பின்னர், மாணவர்கள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கதாபாத்திரங்களின் அடிப்படையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்களின்படி வெவ்வேறு நிலைகளில் நிற்க வேண்டும்.



**விளையாட்டின் முன்மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது**




ஒரு செடியை நடும் பொருட்டு குழி தோண்டுவதற்கு மேற்கண்டவற்றுள் எது பயன்படும் ?

**முறை :**

1. ஏற்பாட்டாளர் முதலில் ஒளிரும் அட்டையை நேரடியாக மாணவர்களிடம் காண்பித்தல் வேண்டும். மாணவர்கள் அதற்கான பதிலை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படவேண்டும். முதல் மூன்று விடைகள் மிகவும் தவறானதாகவும் வேடிக்கையானதாகவும் அமைந்திருக்கும். கடைசி விடையானது 'நோட்டா' அல்லது 'இவர்களில் எவருமில்லை' என்பதில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.
2. இப்பயிற்சியின் மூலம் மாணவர்கள் ஒவ்வொரு முறையும் வேறு வாய்ப்பின்றி சரியான விடையான நோட்டாவை தேர்வு செய்வர். ஒவ்வொரு நிலை முன்னேறும் போதும் அறிவுக்கு ஒவ்வாதவற்றின் அளவு கூடிக்கொண்டே இருக்கும்.
3. அனைத்து ஒளிரும் அட்டைகளையும் (மொத்தம் 5 அட்டைகள்) பயன்படுத்திய பின்னர் விளையாட்டு முடிவுக்கு வரும். தற்போது ஏற்பாட்டாளர் நோட்டா என்பதன் பொருள் குறித்தும், 2013 ஆம் ஆண்டிலிருந்து அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்றும் விளக்கிக் கூறவேண்டும். (மாணவர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்து அறியாமல் இருந்தால் அது குறித்தும் விளக்க வேண்டும்).
4. இதன் பிறகு ஒருங்கிணைப்பாளர் இறுதி வினாவிற்கு வருவார். இக்கேள்வி அவரால் கேட்கப்படும்-'நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள் ?'
   - a) தனக்கு சாதகமாக வாக்களிக்க கையூட்டு வழங்கும் ஊழல் வேட்பாளர்
   - b) திறமையற்ற சோம்பேறித்தனமான வேட்பாளர்
   - c) குற்றச்சாட்டுகள் உள்ள வேட்பாளர்
   - d) இவர்களில் எவருமில்லை (நோட்டா)

5. பிறகு குழு உரையாடல் / விவாதம் நடைபெறும். ஒருங்கிணைப்பாளர் மாணவர்கள் குழுவாகப் பிரிவதற்கும் விவரங்களைத் தயார் செய்வதற்கும் 15 நிமிடங்கள் கொடுப்பார். குழு கலந்துரையாடல் / விவாதம் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களைப் பற்றியதாக இருக்கும்.
    - உங்கள் வாழ்க்கையில் தினசரி எடுக்கும் முடிவிற்கு நோட்டா விருப்பத்தை வைத்துக் கொள்ள எண்ணுகிறீர்களா ?
    - நமக்கு என்ன தேவை என்பதைத் தெரிந்து கொள்வதைப் போல், என்ன தேவை இல்லை என்பதைத் தெரிந்து கொள்வதும் முக்கியமானது என்ற செய்தியை அறிந்து கொள்ளுதல்.
    - நீங்கள் ஏன் நோட்டாவை முக்கியமானதாகக் கருதுகிறீர்கள் ?
6. நோட்டா என்பது வாக்காளர்களுக்கான முக்கிய வாய்ப்பு என்பதையும், நோட்டாவுக்கு வாக்களிக்கும்போது, அது, களத்தில் உள்ள வேட்பாளரை, மக்கள் நிராகரிக்கின்றனர் என்பதையும், அதன்மூலம் அரசியல் கட்சியினர் அடுத்த தேர்தல்களில் வேறு தகுதியான வேட்பாளரை நிறுத்த வழிவகை செய்வர் என்பதையும் ஒருங்கிணைப்பாளர் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.
7. விளக்கத்தின் பொழுது ஒருங்கிணைப்பாளர் ஏதேனும் ஒரு கட்சி /அரசியல் நபர் பற்றி ஒருபக்கச் சார்பான கருத்துகளைத் தெரிவிக்கக் கூடாது.
8. வாக்களிப்பதில் நேர்மையைக் கடைப்பிடிப்பதைப் பற்றி தெரிவிக்க இது ஒரு நல்ல வாய்ப்பாகும். யார் தகுதி வாய்ந்த வேட்பாளர், யார் தகுதி இல்லாத வேட்பாளர் என்பதை எவ்வாறு முடிவு செய்வது என்பது குறித்த மாணவர்களின் கண்ணோட்டத்தை ஒருங்கிணைப்பாளர் கேட்க வேண்டும்.
9. பதில்களைப் பெற்ற பின்னர் ஒருங்கிணைப்பாளர் தெரிவிக்க வேண்டியவை :
    - வேட்பாளரின் பின்புலத்தை அறிந்து கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம்.
    - அவர்களது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை.
    - தேர்தல் காலங்களில் வேட்பாளர்களிடமிருந்து பணம் பெறுவதைத் தவிர்த்தல்.
    - அத்தகைய வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்காமல் இருத்தல்.
10. இந்த நிகழ்வின் இறுதியில், ஒவ்வொரு வாக்கும் எவ்வாறு முக்கியத்துவம் பெற்றது என்பது குறித்தும், தரமான வேட்பாளர்களைத் தேர்வு செய்ய நாம் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் நாட்டை நிர்வகிப்பதில் மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்பது குறித்தும் நேர்மறையான கருத்துக்களை ஒருங்கிணைப்பாளர் குறிப்பிடுதல் வேண்டும்.
11. **3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்:**

    தனி நபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து செயல்பாடுகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்றப் படவேண்டும். ஒருங்கிணைப்பாளர் வெவ்வேறு நபர்களிடம் கீழ்க்கண்டவற்றை வினவலாம்.
    - இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
    - மனதில் வைத்து கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
    - எந்த **ஒரு** செயல்பாடு பற்றி அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள், செயல்பாடுகள் குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)





## செயல்பாடு: முன்னேறுதல்

### கண்ணோட்டம் :

முன்னேற்றச் செயல்பாடு என்பது கலந்துரையாடும் விளையாட்டாகும். இந்த விளையாட்டின் நோக்கமானது, சேவைகளை அணுகுவதில் சமூகத்தில் சில பிரிவினர் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்குமான புரிந்துணர்வுகளை மாணவர்களிடையே வளர்ப்பதே ஆகும். மாணவர்களுக்கு சில பொறுப்புகளை அளித்து, அந்தப் பொறுப்புகள் குறித்து கேட்கப்படும் கேள்விகளுக்கு எளிமையாக ஆம்-இல்லை என்ற பதில்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். இந்த விளையாட்டானது மாணவர்கள், சமூகத்தின் சில பிரிவினர் பங்கேற்பதில் எதிர்கொள்ளும் சவால்களையும் அவர்கள் அத் தேர்தல் நடைமுறையில் முனைப்புடன் பங்கேற்பதற்கான வசதிகளையும் செய்ய வேண்டியதன் அவசியத்தை இக்கேள்விகளின் மூலமாக அறிந்து கொள்வார்கள்.

### கற்றலின் விளைவு

செயல்பாடுகளின் முடிவில் மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. சில பிரிவினர் எதிர்கொள்கிற பாதகமான நிலைகள் குறித்து உணர்தல்

ii. ஒவ்வொரு வாக்கும் சமமானது

iii. வாக்களிப்பது எனது உரிமை

iv. வாக்களிக்கத் தேவையான வாக்குச் சாவடியில் உள்ள வழிவகைகள்

### தகவல் தொகுப்புகள் :

i. கதாபாத்திரத்திற்கான அட்டைகள் **(பக்கம்** 33)

ii. கதாபாத்திரத்திற்கான கணக்கீடு(Tally) தாள் **(பக்கம் 35)**

iii. கேள்விகளின் பட்டியல் **(பக்கம் 24)**

iv. மேற்கோள்களுக்கான கருத்துகள் **(பக்கம் 25)**

### தேவையான சாதனங்கள் :

i. கோடு போடுவதற்கான சாக்பீசுகள்.

ii. குறிப்பேடு / காகிதம் மற்றும் எழுதுகோல்

**கால அளவு :** 60 நிமிடங்கள்

**கால வரையறை :** அக்டோபர் அல்லது நவம்பர்



